

ஓலை 196| ஓசை 319| அக்டோபர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவிஞர் மு மேத்தா

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

இடுக்கண் வருங்கால் நகுக அதனைஅடுத்தது
ஊர்ப்பது உவப்பதோ அற்று

பொருள்

துன்பம் அல்லது தோல்வி ஏற்படும் போது சோர்ந்து விடாமல் சிரிக்க வேண்டும்; ஏனெனில், அத்துன்பத்தைச் சகித்துக்கொண்டு எதிர்த்து நிற்பதை விட, அதை வெல்வதற்கு வேறு சிறந்த வழி எதுவும் இல்லை.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

தமிழின முழக்கம்

தமிழே ஒலிக்கட்டும்

பாவகை : இசைப் பாடல்

தமிழர் ஒன்றாய் இணைந்திடுவோம்!
தமிழர் ஒற்றுமைப் பெற்றிடுவோம்!
தமிழாம் தாயைப் போற்றிடுவோம்!
தமிழும் வாழ உயிர்த்தருவோம்!

தமிழை மட்டும் கற்றுயர்வோம்!
தமிழில் மட்டும் பேசிடுவோம்!
தமிழில் எழுதி உயர்ந்திடுவோம்!
தமிழில் இசையைப் பாடிடுவோம்!

தமிழில் கல்வி பயின்றிடுவோம்!
தமிழில் கோவிலில் ஓதிடுவோம்!
தமிழின் இலக்கியம் சுவைத்திடுவோம்!
தமிழின் அறத்தைக் காத்திடுவோம்!

தமிழின் இலக்கணம் கற்றுயர்வோம்!
தமிழின் நூல்நயம் அறிந்திடுவோம்!
தமிழர் மறவம் நிலைநிறுத்தி
தமிழர் மறவர் எனப்புகல்வோம்!

தமிழில் புலமைப் பெற்றிடுவோம்!
தமிழில் பிறமொழி அகற்றிடுவோம்!
தமிழில் கலப்புச் செய்பவரை
தலையிலா முண்டமாய் மாற்றிடுவோம்!

தமிழின் மரபு யாப்பெடுத்துத்
தமிழின் புகழைப் பாவடிப்போம்!
தமிழே நாட்டில் மணக்கட்டும்!
தமிழே எங்கும் ஒலிக்கட்டும்!





திட்டமிடல்

பாவகை : குறள் வெண்பா

1. எண்ணக் கனவுமே ஏற்றமதைப் பெற்றிட
உண்ணாட்டம் செய்திட உய்வு.
* (உண்ணாட்டம்- ஆராய்தல்)

2. எண்ணித் துணிந்தால் எணமும் உயருமே
வண்ணமாய் மாறுமே வாழ்வு.
*(எணம்-மதிப்பு)

3. எண்ணியதைச் செய்திட ஏதமின்றி வாழ்ந்திடக்
கண்ணயர்தல் விட்டால் களிப்பு.

4. எதையும் செயலாக்க என்றும் நிலைக்க
அதையும்நீ நன்றாக ஆய்.

5. செய்கை சிறக்கவே செய்யும்முன் ஆய்வாயே
உய்யும் வகையறிதல் உரு.
*(உரு-மேன்மை)

6. சிந்தனை செய்தே சிறப்பாய் முயன்றிட
நிந்தனை நீக்கல் நயம்.

7. நம்பிக்கை கொண்டே நலிவை அகற்றிட
தம்பட்டம் தன்னைத் தகர்.

8. கனவினைக் காட்சியாக்க கத்தாமல் நீயும்
நனவாக்குந் திட்டம் நினை.

9. நுணுகி ஆராய்ந்தே நுட்பமாய் ஆற்ற
அணுவணுவாய் சிந்தித்தல் அம்.

10. நினைத்தவை யாவும் நிறைவேற என்றும்
தினையளவாய் எண்ணல் திறன்.

கவிஞர் செ. கலைவாணி



க. திங்கள் பொழுதுகள் மெல்லக் கழிய
நினைவில் மறந்த முகம்.

உ. பொறுத்தல் துறந்து ஒறுத்தல் தழைக்க
வெறுப்பு மலிந்த உறவு.

ங. ஒறுத்தல் விளைத்த அகலா வடுக்கள்
மறக்க மறுத்த மனம்.

ச. மடிமை விளைக்கும் தெளிவிலாத் தேற்றம்
மருள்மதி மன்னன் நிலம்.

ஞ. ஞாலம் செழிக்க பொழியும் பெயல்துளி
இன்மை அகற்றும் அறிவு.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு



இந்தப் பாதையை
நான் கடக்கும்
தருணம்
ஓர் பேரிரைச்சல்
என் செவிப்பறைக்குள்
சூல் கொள்ளலாம்.

இத் தருணம்
ஓர் மௌனத்தை சுமந்து
கடக்க விடாது
என்னை.

எதையும்
தீர்மானிக்கும் பக்குவம்
என் சிற்றறிவிற்கு
எட்டி விட்டால்
சாட்சிய மற்ற
கடவுளென்று பிதற்றுவேன்
என நீங்கள்
எண்ணிச் சரியாமலிருங்கள்
எனக்கது போதுமானது.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

முடிவில் ஒரு தொடக்கம்

முடிவிலும் ஒரு தொடக்கம் உண்டோ?
முடிந்தால் தானே அங்கே ஓர் ஆரம்பம் எழும்.
முடிவு செய்தால் முடிவா முதலா என்றே
புரியுமோ வழிகளில்.

தொடர்கதையின் முடிவுகளில்
சிறுகதைகளின் ஆரம்ப வடுக்களாய்.
துலாபாரம் தூக்கலில்
எந்தப் பக்கம் அதிகமாய்.

துன்பத்தின் அடிச்சுவடி
இன்பத்தின் பொட்டு
வைப்பதிலே முற்றுகையிட.

தயவின்றி தாவும்
கணங்கள் தாங்கிப்
பிடிக்குமோ அச்சாரங்களையோ.
அடிவேர்களையோ?

இதயக்கணக்கின் இறுக்கங்களில்
செதுக்கப்படுவதே முதற்குறியா? முற்றுப்புள்ளிகளையா?
விடைகள் தான் வினாக்களைத் தொடுத்திட
தொடுத்திட்ட மாலையில்
பறித்த பூக்கள் எங்கே?

புள்ளிக் கோலங்களை அரவணைக்கும்
விடியலும் வட்டமாகும்.
மயங்கும் மாலை முடிவென்றால் தொடக்கமாகும்
அடிவான உதயங்களின் ஆரவாரங்கள் என்னவென்பது?

கவிஞர் இரஜகை நிலவன்

பொட்டு வைத்தவளே
போட்டு கொடுக்காதவளே
சிலையென நீ இருக்க
கலை வடிவம் தேடி நிற்பேனோ!

உன் கன்னக் குழியில் விழும்
உன் புன்னகை என் விலங்கு
நெற்றியில் விழுந்த முடியில்
பற்றியே போனது என் இதயமே!

உடுக்கை போல் இடுப்பில்
படுக்கை எப்போது சொல்லம்மா?
நானும் எனை மறந்து உறங்க
நாள் பார்க்கவா சொல்லம்மா!

ஆவணியில் கல்யாணம்
ஆசைதான் எனக்கு
திங்களும் நகர மறுக்கிறதே
தீயென சுடுகிறதே
உன்னைவிட்டு வாழும் நாள்களே!

எல்லாம் சாத்தியமா?
அவனருகில் ஒலி
எழுந்தேன் கனவுலகில் நின்று
தொடர்ந்தேன் நிஜவுலகில் இன்று!

கவிஞர் ஜவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

காணா நொடியும் வருடமாகுதே



புன்னகை தவழும்
பூவையுன் முகம்

அலைபாயும் மனதாய்
அசைந்தாடும் கூந்தல்

அங்குமிங்கும் அசைந்தாடும்
அன்பே உன்விழிகள்

பெருமூச்சின் தாக்கம்
பெண்ணின் ஏக்கம்

நளினமான நடையழகு
நாணும் பெண்ணழகு

காதோரம் லோலோக்கு
கவர்ந்திழுக்கும் பார்வை

கனிவானக் காதலுணர்த்தும்
உதட்டுச் சுழிப்பு

மௌனத்தின் மொழியால்
தவிக்க வைப்பவள்

உன்னைக் காணாத
நொடியும் வருடமாகுதே

வாராய் என்னவளே
வடிவான சின்னவளே

எண்ணங்களில் நீதானே
நீங்கிடாது சுழல்கிறாயே

வாழ்ந்திடவே இணைந்திடு
வாட்டமது விலகிடுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

காத்திருப்பின் தவம்

மழைக்காக காத்திருக்கும் மண்ணை போல
கரைக்காக காத்திருக்கும் அலையை போல
விழி வைத்து காத்திருக்கிறேன்
வருவாய் என்ற ஒற்றை நம்பிக்கையில்

காலை தேநீர் ஆறுகிறது
கடிகாரம் மட்டும் ஓடுகிறது
உன் காலடி சத்தத்திற்காக
என் செவிகள் விழித்திருக்கிறது

பகல் வெயில் ஏறி இறங்குகிறது
நிழல் கூட இடம் மாறுகிறது
நான் மட்டும் நகரவில்லை
என் நம்பிக்கை கரையவில்லை

மாலை மழை தெருவை நனைக்கிறது
என் விழிகள் மட்டும் உனக்காக காய்கிறது
இரவு ஊரை உறங்க வைக்கிறது
காத்திருப்பு மட்டும் உறங்குவதில்லை

காத்திருப்பு தண்டனை அல்ல
அது ஆன்மாவின் தவம்
காதல் இருக்கும் வரை
காத்திருப்புக்கு மரணமில்லை

கவிஞர் நஸ்ரினா, குருணாகல் (இலங்கை)

பலூன்

எப்போதும் பலூனையே
பரிசளிக்கிறேன் மகளுக்கு.

என்னுயிர் மூச்சை விடவும்
பெரிய பரிசு
வேறென்ன இருக்கிறது அவளுக்கு?

அவள் பலூனுக்குள் நான்
என் நெஞ்சுக்குள் மகள்

பலூன் வெடித்தாலும்,
தாயன்பு உயிர் மூச்சாய்
அவளைத் தொடரும்.

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

நேற்றிலிருந்து நான்
தேடிக்கொண்டிருக்கிறேன்

அப்பா கேட்டார்
"என்ன தேடுகிறாய்?
வண்டி சாவியா?
இதோ இருக்கிறதே"

அண்ணன் கேட்டார்
"நேற்றுப் படித்துப் பாதியில்
வைத்த வெண்முரசு நாவல்தானே"

தம்பி கேட்டான்
"கிரிக்கெட் பந்தா தேடுகிறாய்
தோட்டக் கதவின் பின்னால்
ஒளிந்து கொண்டிருக்கிறது"

தங்கை கேட்டாள்
"அந்தக் கோடு போட்ட சட்டைதானே?
அலமாரியில் பார்த்தேனே
அங்கேதான் இருக்கும்"

இல்லை இல்லை
இல்லவே இல்லை
இவர்களுக்கு நான்
எப்படிச் சொல்வேன்
என்னைத் தொலைத்துவிட்டுத்
தேடுகிறேனென்று

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

யாருமற்ற பொது வழியில்
கனத்த மனதோடு
தனித்து விடப்பட்ட
என் காதலோடு
வெகுநேரம் காத்திருந்தேன்!

அது பொழுதடங்கும் நேரம்!
இறுதியாய் கிடைத்த
இறங்கு பொழுதில்
இதயம் மட்டும் என்ன செய்யும்?

எங்கெங்கோ தொலைவில்
நீக்கமற பறந்து திரிந்து
வேண்டிய உணவைத் தேடித் தின்று
திரும்பிடும் பறவையின் நிழலைப்
பற்றிக்கொள்ளும் முயற்சியில்
பறக்கிறது மனம்!

கொரித்த உடன் செரிப்பதற்கு உகந்த
கூடுதலாய் கொஞ்சம்
நீராகாரம், ஊறுகாய் மட்டுமாவது
எடுத்தவரும் ஓசை கேட்கிறதா எனத்
வயிறு போடும் கூச்சலில்
வரப்பில் ஊர்ந்து போகும் எறும்புகளும்
என்னை ஏக்கத்தோடு திரும்பிப் பார்க்கிறது!

யாருமற்ற பொழுதுகள் என்பது
யார் அற்றும் வந்துசேராத
விருப்பங்கள் சுமந்த வினாக்குறி!
சில கேள்விகள் கேட்கும் முன்பே
யாரும் கேளாத திசையில்
புதைந்து போகும் அதிசயம் நடக்கும்!

நான்
யார் கேட்டும்
யார் பார்த்தும்
யார் ரசித்தும்
யாரும் விரும்பாத விடம்!

நான் அரற்றும் உணர்வுகள்
ஆலாபனை போல் எழுந்து
அன்பே உன்னை அணைக்கும்
எனவே
நாள்தோறும் ஆராதனை செய்கிறேன்!

நீ கேளாத போதும்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

அகவெளி முழக்கம் ஆன்மாவின் எல்லை
சொல்லில்லா இடத்தில் தொடங்கும் புள்ளி
பிரபஞ்சத்தின் கனல் விழிந்து எழுகிறது
பேச்சு என்பது காற்றில் உதிரும்
மௌனம் காலம் கடந்த கல்வெட்டு
அமைதியின் மடியில் உறங்கும் தனிமை
உள்ளுணர்வு பேசிடும் உன்னத அற்புதம்
விடைத் தேடி அலைந்த விழிகளுக்கு
கிடைத்த ஆத்ம மௌனச் சாட்சி
மௌனத்தின் கடைசிப் பக்கத்தை வாசிப்பவன்
மரணத்தையும் தாண்டிய அமரத்துவம் ஆகிறான்

கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருது நகர்

அதுமட்டும்

பிறரிடம் பிடித்த
சாதித்த விஷயங்களை
பாராட்டும் வைபவம்
அந்த கணத்தோடு
முடிந்துவிடுகிறது

விருப்பம் இல்லா விஷயம்
பிறரிடம் காணும்போது
அதற்கு மட்டுமல்லாது

இதுவரை அவரிடம்
கண்ட பிடிக்காத விஷயம்
ஒட்டுமொத்தமாய் அணிவகுத்து
கடும் கோபம் கொள்ளச்செய்கிறது
மனிதர்களை..

****

இருவரையும்

எதிர் மனிதரிடத்தில் பேசுகையில்
அவர் சொல்பவற்றையும்
நம்மின் எதிர்வினையையும்
உண்மையா
காரியம் ஆகவா
தன் இருப்பைக் காட்டவா
அறிந்த தாய் காட்டிக்கொள்ளவா
ஏளனம் செய்யவா
என முன்னவரைப் பற்றி
யூகம் செய்யவும்
நாம் சொல்வது
எல்லாம் சரியா

என விலகி நின்று
உருவமில்லா
ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்

அவர்தான் மனம்



பேசவே கூடாதென நினைத்த
அளவிலான கோபம்தான்

"ஹலோ" எதிர்முனையில் கேட்ட நொடி,
பஞ்சுமிட்டாயென கரைந்தேபோனது,
கோபக் கோபுரங்கள்



ஒரு ஆலமரத்தின் ஆணிவேர் சாய்ந்ததில்
வாடி நின்றது கிளைகள் எல்லாம்
பற்று கோல் இல்லையென.

மீண்டும் கொஞ்சம் நிமிர்ந்து நிற்க
முயற்சி செய்வதை போல
ஓராண்டு முடியும் முன்
துளிர் விட்டு இருக்கிறது
ஆணிவேரின் புதிய வேர்.

ஆணிவேராய் இருந்த என் கணவரின் மறுபிறவியோ
புதிதாக துளிர் விட்ட எங்கள் மகளின் மகவு.

எப்போதும் என்னை கலங்க விடாத என் கணவனின்
மறைந்த தினத்தை எண்ணி எண்ணி கலங்கிய நாட்கள்
ஒன்பது மாதங்கள்.
ஆனால், இனிமேல் இந்நாளில் கூட நீ கலங்காதே அன்பே என
அதே தினத்தில் மறுபிறவி கொண்டாரோ என்னவர்.

கரம் கோர்த்து தோள் சாய்ந்து நடந்தேன்
இனிமேல் கரங்களில் அள்ளி அணைத்து
தோளில் சாய்த்து நடப்பேன்.

என்னவனின் மறுபிறவியான
என் பேரனை.
இறைவா!

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர், சென்னை

நலந்தரும் நவராத்திரி

நன்றல்லாதன ஒருபோதும் யார்க்கும் செய்யாதீர்;
நமசிவாயம் நம்மைப்பார்த்துக் கொண்டிருப்பதை மறவாதீர்!
நமசிவாயத்திற் கோர்ராத்திரி சிவராத்திரி என்றால்
நம்மன்னைக்கு நவராத்திரி உரித்தாமென்பதை மறவாதீர்!

நவராத்திரியின் முதல்மூன்று நாட்கள் துர்க்கைக்காம்,
நான்காம் நாள்முதல் ஆறுவரை திருமகளுக்காம்,
நான்முகன்நாவில் இருப்பவளுக்கோ இறுதி மூன்றென
நம்நாட்டோர் ஒன்பது நாட்களில் தாயவளை
நலம்பெற வேண்டி வழிப்பட்டு தசமிநாளில்
நானிலமும் பயனுற விஜயதசமியைக் கொண்டாடுவரே!

புரட்டாசி மாதத்தில் வந்திடும் நவராத்திரி
புவிவாழ்வை வென்று சுவர்க்கத்தில் வாழும்
தேவர்களுக்கு இராப்பொழுதாகும், இதுவாதவனின் பயணத்தில்
தட்சணாயன காலமாம்; இக்காலம் சாரதா
தேவியாம் சரஸ்வதி தொழுகையைச் சிறப்பிப்பதால்
சாரதா நவராத்திரி விரதமிருக்கும் காலமாமே!

உத்தராயாணத்தில் வந்திடும் நவராத்திரியும் உண்டதன்
உத்தம பெயரோ வசந்த நவராத்திரியாம்;
உடையவன் பேரழிவுக் காலமுடிவுக்குப் பின்னர்
உலகைப் படைக்க இச்சைக்கொண்ட போது
உருவானது இச்சாசக்தியது ஏனுருவானது எனயெண்ணிட
உருவானது ஞானசக்தியதனுடன் கிரியாசக்தி துணையாலே
உலகைப் படைத்ததைக் கொண்டாடுவதே நவராத்திரியாம்!

இச்சா சக்தியின் திருப்பெயரே துர்க்கை;
ஞானசக்தியின் திருப்பெயரோ திருமகள் என்பதாம்;
கிரியா சக்திதான் கலைமகள், இத்தேவியர்
கீர்த்தியைப் புகழ்ந்து பாடிக் கொண்டாடவும்
கருணைமிகு அன்னையை வெவ்வேறு அலங்காரத்தில்
காண்பதற்கும் கிடைத்ததே நமக்குப் புவியில் நவராத்திரியதில்
கொலுவழகைக் காண்பதென்பது பிறவியின் பெரும்பயனே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

சொந்த மண்ணை விட்டு வந்தோம்,
சொந்தங்களின் அன்பை மனதில் சுமந்து வந்தோம்.
சிரித்த முகத்தோடு வாழ்கிறோம் இங்கே,
சில கண்ணீரை மட்டும் மறைத்து வைத்தோம் நெஞ்சுக்குள்ளே.
குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக உழைக்கிறோம்,
நம் கனவுகளுக்காகத் தினமும் ஓடுகிறோம்.
உடல் இங்கே இருந்தாலும்,
உயிர் மட்டும் ஊரில் உறவுகளோடு வாழ்கிறது.
நமக்காகக் காத்திருக்கும் உறவுகள் அங்கே,
அவர்களுக்காக ஏங்கும் இதயம் இங்கே
பண்டிகை வந்தாலும் தனிமைதான்,
புன்னகைத்தாலும் மனதுக்குள் ஏதோ ஒரு வலிதான்.

கவிஞர் தம்பிராஜா டிரோன்குமாரி

நகரம்

பகலில் சாலைகளின்
முகத்தில் வாகனங்களின்
பாதயாத்திரை பயங்களாய்

இரவோ மின்சாரம்
தின்று கொப்புளிக்கும்
வெளிச்சத்தின் மிச்சங்களாய்

தெருவெங்கும் தேநீர்
கோப்பைகளின் சினுங்கல்
சத்தங்கள் ஆவியாய்

நகரம் என்பது
சொர்கத்தில் தொலையும்
நரகத்தின் எச்சங்களாய்

வீதிக்கொரு மருத்துவமனை
மனிதனின் ஆரோக்கியத்தை
விலை பேசும் சந்தைகளாய்

நாள்தோறும் இங்கே
மனித கூட்டம் கடைகளில்
வாங்கப்படும் தோல்விகளாய்

ஒவ்வொரு இடத்திலும்
பணத்தின் கரவொலி
ஏழ்மைக்கு இம்சைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

என் மீது அதிக அன்பு செலுத்தாதீர்
அதற்கு நான் பாத்திரவான் அல்ல
என்பது மட்டுமல்ல.
பதிலுக்கு
செய்முறை அன்பும்
செய்யத் தெரியாதவன்



கவிஞர் இரா. மதிராஜ்

புரிந்துணர்வு



புரிந்துணர்வு என்பது
பெரிய வார்த்தை அல்ல
சிறு புன்னகையில்
பிறக்கும் மௌன மொழி

நீ சொல்லாத வலியை
நான் உணர்வது
நான் மறைக்கும் கண்ணீரை
நீ அறிவது!

சண்டை வந்தாலும்
சந்தேகம் வந்தாலும்
கைவிடாமல் நிற்பதுதான்
புரிந்துணர்வு

பேசுவது காதல் அல்ல
பேசாமலே புரிவது தான் காதல்
அதுதான் புரிந்துணர்வு!

நீயும் நானும்
வேறு வேறு அல்ல
ஒரு உயிரின்
இரு துடிப்புகள்

புரிந்துக்கொள்ள
முடியா அன்பு
எக்காலத்திலும்
சேராத
வானும் மண்ணும்
போன்றதே!

கவிஞர் ஏ எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)



அரசனின் கையில் செங்கோலாய்
அறிவரின் கையில் எழுதுகோல்
மையுடன் மெய்யையும் நிரப்பி விட
உரக்க உரைத்திடும் ஏவலனாய்

உலகில் சரித்திரங்கள்
பல புதிதாய் தோன்றிட
புரட்சி செய்யும் எழுதுகோல்

முகவாயில் தொட்டு
மும்முரமாய் சிந்திக்கும்
அத்தனை பேரையும் இல்லை
ஆயிரத்தில் சிலரையே
ஆக்கியதுண்டு அறிஞராய்

சிவப்பு மையாய்
பிழை திருத்தும்
பச்சை மையாய்
ஆட்சி செலுத்தும்
கருப்பு மையாய்
கோடிட்டுப் போகும்
எழுதுகோலுக்கும் உண்டு
பல முகங்கள்

எழுதிப் பழகாத
பிஞ்சு விரல்களுக்கும்
சிறிது நேரம் அதிகாரம் கொடுக்கிறது
ஆசிரியராய் விளையாட்டுப் பொழுதில்

அப்பாவின் சட்டைப்பையில்
நீங்காதிருக்கிறது
அதிகாரத் தோரணையில்

அம்மாவின் அலமாரியில்
பள்ளிக்கால பரிசளிப்பாய்
என்ன என்னவோ
வடிவங்கள் இருந்தாலும்

எண்ணத்தில் நேர்மையிருக்க
ஏற்றி வைக்கும் ஏணிப்படியாய் எழுதுகோல்

மனதில் சுமைகளோடு
தனிமையை விரும்பி
நிலவை ரசித்தேன்.
நட்சத்திரக் கூட்டத்தின் மத்தியில்
என்னைப் போல் தனிமையை விரும்பிய
அந்த ஒற்றை நிலவு
என்னைப் பார்த்து கண் இமைத்து
என் மனதை ஆறுதல் படுத்தியது.

நான் அழும் வேளையில்
ஜன்னல் வழி பார்த்து
என்னோடு இருக்கும் நிலவு
தோழனாக கூட வரும் நிலவு,
அம்மாவைப் போல்
மனதை மகிழ்விக்கும் நிலவு.



வானத்தில் ஒளிரும் நிலவு
என்னை கவிஞராக்கிய ஒற்றை நிலவு
உன் ஒளியில்
என் மனசு குளிருதே!

கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா நிம்ஸியா, மூதூர்

உடைந்த கண்ணாடி

உயிராய் நினைத்த நட்பிதுவென்று,
உண்மையாய் நானும் நம்பியிருந்தேன்!
உன் மனக் கசப்பை மறைத்து வைத்து,
உதட்டினில் சிரிப்பை விதைத்ததென்று
உணர மறுத்து ஏமாந்து நின்றேன்!

முகத்திற்கு நேரே புகழ்ச்சி பேசி,
முதுகிற்குப் பின்னே இகழ்ச்சி தந்து,
நம்பிக்கை என்னும் மாளிகையை
ஒரே நொடியில் உடைத்து விட்டாய்!

கண்ணாடி உடைந்தால் ஓசை வரும்;
என் நம்பிக்கை உடைந்தால் கண்ணீர் வருதே!
பொய்யான உந்தன் புன்னகையை விட,
என் தனிமையின் அமைதியே மேலானது!

இனி உன் நிழலும் எனக்கு வேண்டாம்,
உன் பொய்முக நட்பும் எனக்கு வேண்டாம்!
மன்னித்து உன்னைக் கடந்து போவேன்,
மறந்தும் இனி உன் முகம் பார்க்க மாட்டேன்!

நெஞ்சார உன்னை நான் நம்பியதற்கு,
நெருப்பினை அள்ளி என் மடியில் தந்தாய்!
என் ரகசியங்களை ஆயுதமாக்கி,
என் பலவீனங்களை வேடிக்கை பார்த்தாய்!

முகம் ஒரு புறம், அகம் ஒரு புறம்,
எத்தனை வேஷங்கள் உனக்குள்ளே?
நட்பென்ற புனிதப் போர்வையைப் போர்த்தி,
நச்சுக் கோப்பையை நீட்டினாய் கையில்!

விஷம் கலந்த உன் புன்னகையை விட,
விலகி நிற்கும் தனிமையே அமுதம்!
உன் துரோகத்தின் ஆழம் காட்டிய வடுக்கள்,
என் வாழ்வின் ஆகச்சிறந்த பாடங்கள்!

இனி நீயும் இல்லை, உன் நினைவும் இல்லை,
என் கண்ணீருக்கு நீ தகுதியானவளும் இல்லை!
உன் பொய்முகத்தை எறிந்துவிட்டு,
என் பேரமைதியை நோக்கி நான் நகர்கிறேன்!



கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

எங்கே சமத்துவம்?

உழைத்தவர்களின் வாழ்க்கை
கேள்விக்குறியாய் வளைந்து கிடக்கிறது.
உழைக்காதவர்களின் வாழ்க்கை
கேளிக்கையால் நிறைந்து நடக்கிறது.
இல்லாதவர்கள் வீட்டில்
இயலாமை சிரிக்கிறது.
இருப்பவர்களின் வீட்டில்
இரக்கம் கருகுகிறது.



உழைப்பவர்களின் வீட்டில்
உலை கொதிக்கவில்லை.
ஆடைகள் நெய்தவர்களுக்கு
ஆடையே இல்லை அணிந்திட!
வீடு கட்டும் தொழிலாளிகளுக்கு
வீதிகளே வீடுகளாகின.
காலணிகள் தைப்பவர்களுக்கு
வெறும் கால்களே காலணிகளாகின.

ஆலயத்தைக் கட்டிட உழைத்தாலும்
ஆண்டவனைப் பார்க்க வழியில்லை.
வியர்வை சிந்தியவர்கள் எல்லாம்
உயர்வைக் காணவில்லை இங்கு!

வேரைக் கொண்டாடாமல்
யாரைக் கொண்டாடப் போகிறீர்கள்?
தன்னிழல் தன்னடியில் விழும்
உச்சிப் பொழுதில்கூட
ஓய்வை விரும்பாதவர்கள் வாழ்வில்
உச்சம் பெறுவது எப்போது?

கலப்பை ஏந்தியவர்கள் கடமையை
மறந்தால், உங்கள் வீட்டு
அகப்பையில் எதுவும் வராது.
இனியாவது உங்கள் அகப்பையில்
சமத்துவத்தை நிரப்புங்கள்;
இல்லையெனில்...

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

மன்னிப்போம், மறப்போம், அன்பை நாம் வளர்ப்போம்!
மன்னிப்பதால் சிறப்பு குறைவதுமில்லை;
நீ சமூகத்தில் தள்ளப்படுவதுமில்லை;
மனமகிழ்வுடன் நம்பிக்கையில் வளர்வாய்!

ஆயிரத்து தொள்ளாயிரத்து இரண்டில் ஆரம்பம்
உலக மனநலக் கூட்டமைப்பின் உருவாக்கம்;
மனமும் உடலும் இணைந்ததே நலம்
உலக மனநலம் சொன்னது!

உடல்நலம் எனக் கண்டுகொண்டு
உளமும் நலம் எனக் கொள்ளலாகாது;
அகத்தின் அழகு முகம் சொல்லி நிற்கும்;
விழிப்புணர்வுடன் நீயும் செயல்படு!

அகமாற்றம் முகம் காட்டி நிற்கும்;
உடலில் நோய் வந்தால் மருத்துவரை நாடு;
உள்ளத்தில் நோய் வந்தால்
பகிர்ந்து வாழ நல்லுறவை நாடிடு!

சுமைகளைக் குறைத்திட ஆரோக்கியமான உறவைத் தேடிடு;
இமைப்பொழுதில் மறைந்துவிடும் மனச்சுமை;
சமூகம் விழிப்புணர்வு பெற நல்ல சிந்தனைகளை விதை;
சான்று பெற்று நீயும் வாழ்வாய் அங்கே!

பிறருக்காக வாழ்வது மட்டும் வாழ்க்கை அல்ல;
தன்னை நேசிக்கத் தெரிந்தவனே பிறரையும் நேசிப்பான்;
உடலை மட்டும் நேசிக்காது,
உள்ளத்தையும் நேசிக்க வைப்போம்!

மன்னிப்பு என்னும் ஆடையை ஊதா நிறம் கொண்டு உடுத்தி,
மகிழ்ச்சி, நம்பிக்கை எனும் உணர்வுகளால்
மனநல விழிப்புணர்வை ஏற்படுத்திடுவோமே!

உலக மனநலத்தைப் பேணுவோமே;
உலகில் நடக்கும் விபரீதங்களைக் குறைப்போமே;
மனிதன் மனிதனாய் வாழ,
பதற்றமற்ற சூழலை உருவாக்குவோமே!

கவிஞர் திருமதி கிங்ஸ்லி, கல்முனை

அருளும், பொருளும்,
கருணையும், ஞானமும்
சேரும் இடத்து
சமன்படுத்தும்
ஞான பிரகாசினி!
லோக மாதா!
உலகம் முழுதுடையாள்!
ஆதாரம் ஏதுமின்றி
அல்லாடும் அனைத்துக்கும்
ஆதாரமாய் நிற்பாள்!
குற்ற கருமை
முற்றும் தொலைத்த கணம்
சாந்தமாய் நிற்கும்,
ஆனந்த ரூபிணி!
சத்வ ஸ்வரூபிணி!
பரப்ரம்ம வஸ்து!
கருவிலே திருவாய் வந்து அமர்ந்தாள்!
அக்கணம் என் கருத்திலே
திறன் வந்து அமைந்ததே!

பிறப்பின் பயனால்
என்ன பயன்?
மருவின்றி எடுக்கும் முயற்சியால் மட்டும்
என் ஆகும்?
அவள் அருளின்றி
ஏதும் ஆகுமா?

காதல் ராதே

நெஞ்சை மிதக்க வைக்கும்
அவளின் மையிட்ட கயல் விழியில்
பாய்வது வைகையோ? பொய்கையோ?

காற்றோடு அசைந்தாடும்
கார் குழலின் நறுமணத்தில்
மயங்கிக் கிடக்கிறேன் நான்.

காது மடலில்
ஆடும் மணிகள் இரண்டும்
எனக்குக் காதல் மடல்
எழுதிடுமோ?

பிறை நெற்றியில்
ஒளிந்து கொண்டதோ
என் உலகம்,
அவள் பொட்டாக.

நளினத்தால் படைத்த
வதனத் திருமேனி இவளோ?

செங்காந்தள் மலரின்
சாற்றைப் பிழிந்து
பொற்குடத்தில் நிரப்பி
இவள் வண்ணம் செய்தாரோ?

எந்தச் சந்தத்தில்
கோர்த்து வைப்பேன்
அவளின் கால் கொலுசின்
சிணுங்கல்களை?

வெண் தாமரை போன்ற
அவளின் செவ்விதழ்கள்
உதிர்க்கும் வார்த்தைகள் எல்லாம்.

என்னிடத்தில் சேர்கின்றன
காதல் ராதையின்
கவிதைகளாக.

அவளை எழுத நினைத்த
நானோ,
ரவி வர்மனாகி
நிற்கிறேன்!

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

கலை வளர்க்கும் சிலை

இளமையில் கல்விதான்
இனிய வாழ்வின் தொடக்கம்தான்
பசுமரத்தாணியாய் மனதில் பதியும்
வயதுதான்.

வாழ்க்கை என்னும் கடலைதான்
கடக்க வேண்டிய அனுபவம்தான்
கல்வி என்ற "தீபம்" தான்
வழிகாட்டும் என்றும்தான்.

பரம்பரை சொத்து கூட
பனிபோல கரைந்திடுமே
கல்வியும் அனுபவமும் கரை சேர்க்கும்
படகுதான்.

செல்லுமிடமெல்லாம் சிறப்புகளை சேர்க்குமே
கல்வியென்ற ஒன்றுதான்
தலைமுறை தாண்டியும்
புகழ் சேர்க்கும் கல்விதான்.

கல்லாதவன் வாழ்வு தான்
படிக்கலாய் மிதிபடுமே
கற்றவனின் வாழ்வென்றும்
கலை வளர்க்கும் சிலைதான்
நாளும் வணங்கும் தெய்வம்தான்.

கற்றலில்லா வாழ்வுதான்
கிணற்றுத் தவளைதான்
வெறுமையின் உச்சம்தான்
வாழ்வென்றும் சுமைதான்.

அனுபவ அறிவும் நாம் கற்ற கல்வியும்
வாழ்விலே நம்மையே சரித்திரமாய் மாற்றுமே
வரலாறாய் ஒளிருமே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு



அறிவுப் புயல் அப்துல் கலாம்
ஆசானாய் கலம்கண்ட அறிவியல் விஞ்ஞானி
ஏழைக்கு மகனாகி ஏளனம் காணாதவர்
உயர்கல்வி கற்றதால் உயர்ந்த மனிதரானார்!

தொலைநோக்குப் பார்வையாலே விண்கல விஞ்ஞானி
பலகலை வித்தகராய் பார்புகழ்ந்து போற்றியவரே
நாட்டின் முதல்குடிமகனாய் பெரும்பதவி அடைந்தவரே
தேசத்தினைக் காத்திடவே நல்வழி காட்டியவர்!

கனவுகளைக் காணச் சொல்லி கட்டளையிட்டவர்
மனதளவில் தவறுகளை மறந்தும் செய்யாதவர்
தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர்
அன்னலைப்போல் வாழ்ந்துகாட்டி அகிலத்தில் பெயர்பெற்றாரே!

உடமையேன்று ஒன்றில்லை உடுத்தும்உடை படிக்கபுத்தகம்
கடமையினை தவறாமல் ஆற்றிச்சென்ற பெரியவரே
ஆசிரியாராய் பணிசெய்தே மண்ணுலகை அடைந்தாரே
மறுபிறப்பு இருந்திருந்தால் மீண்டுமவர் பிறந்திடனும்!

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

துளி



தண்ணீரும்
படகும்
நீயும்
தனித்து
விடப்பட்டாலும்
துடுப்பெனும்
கல்வி
கரம் நீட்டி
கரை சேர்க்கும்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்



அன்பே! நான் இறந்த பிறகு
ஆயிரம் கோடிகள் விலைபெறும்
மாபெரும் தாஜ்மகால் மனைவிக்கு வேண்டாம்!

உயிரோடு அவள் இருக்கும்போது
உணவும், உணர்வும் வாழ்வில் முக்கியம்.
நண்பனாய் நட்புடன் மனைவியுடன் பழகு.
தந்தையாய் அவளுக்குப் பாதுகாப்பு அளித்திடு.
தாய்போல் அவளைக் காத்திடு.
குழந்தைபோல் மென்மையாகக் கையாளு.

பொய்மையின் பிடியைத் தடுத்து நிறுத்திடு.
உண்மை உரைகளில் உள்ளம் நிறைத்திடு.
நோயுற்றால் செவிலியாய் பார்த்திடு.
கவலைப்பட்டால் கரங்களைச் சேர்த்திடு.
அருகமர்ந்து கேட்கும் மொழிகளைக் கொடுத்திடு.
இன்னலையும் இன்பத்தையும் இல்லாளோடு பகிர்ந்திடு.

புரவி உல்லாசம் துணைவிக்கு வேண்டாம்.
புல்தரையில் பகிரும் பாசம் போதும்.
உங்கள் உறவினர் முன் இகழாதே.
ஊரார் பேச்சுக்கு அடிபணியாதே.
தூய்மை அன்பில் துயர்களைத் துடை.

அன்புக் கோலங்கள் நம் முற்றத்தில்,
வம்புச் சண்டையோ வெகு எட்டத்தில்!
மற்றவர் முன்னும் பெற்றவர் முன்னும்
எனக்கு மதிப்பளிக்கக் கற்றுக்கொள்.

தவறு செய்தால் மன்னிப்பை வழங்கு.
சரியாகச் செய்யப் பயிற்சி கொடு.
நிழலாய்த் தொடர்வேன்; நினைவில் இனிப்பேன்.
கனவில் சிரிப்பேன்; கண்ணீரில் இணைவேன்.

உலகம் போற்றும் சோடிக் குருவிகளாய்,
நீயும் நானுமாய் நவீன மும்தாஜ்
எடுத்துக்காட்டாவோம்!

கவிஞர் ரெஜினா பானு, மேலூர்



உயிரினைத் தாய்
உருவாக்கி உயிரூட்டிட
உடலோடு தாய்மொழி
உணர்வினைச் செதுக்கியதே!

அன்னை கருச்சுமந்த
அன்பின் ஆழமே
அகமெனும் அரணில்
அழியாது திகழ்கிறதே!

தாயின் உதிரத்தில்
சுரந்த பாலோடு
உயிர்த்துளியில் தமிழின்
இனப்பற்று ஊற்றாகிறதே!

அறத்தை ஊணோடு
அழகாய் ஊட்டிட
அகமறம் தமிழின்
அருஞ்சொல்லில் வேரூன்றியதே!

தாய்மடித் தொட்டிலாய்
தாங்கி நிற்க
தமிழ்மடி எனக்கு
தரணியில் பெருநிதியானதே!

தாய் நெஞ்சில்
அமர்ந்து தவழ்வதாய்
செந்தமிழ் நாவில்
தேனென ஊறுகிறதே!

தாய் மண்ணில்
தாய்மொழியோடு பூத்து
தமிழுக்காய் நிலம்காத்து
வழுவோடு வாழும்உயிரே!

கவிஞர் கிருஷ்ணபி, மன்னார்

நாளை நாம் வகுக்கும் திட்டங்கள் யாவும்
நாளைய பொழுதில் வெறும் காற்றில் கரையும்.
நாடியோர் காட்டிய பாசமும் கூட
நடுவழியில் நம்மை ஏமாற்றிச் செல்லும்.

பெற்ற மகளின் பேரன்பு என்றே
பிதற்றிக் களித்த என் முதிர்ந்த நெஞ்சம்,
இற்றை நாளில் அவளின் மௌனத்தில்
இடிபட்டு வீழ்ந்து சிதறிப் போகுது.

ஒவ்வொரு கணமும் அவளுக்காய் நான்
உழைத்துச் செதுக்கிய பாதைகள் யாவும்,
இன்று அவளின் உலகத்தில் ஏனோ
இடமற்ற பாரமாய் மாறிப் போகுது.

ஈன்றவள் மீது பாசம் வைத்தவள்
இன்னொரு உலகம் கண்டதும் விலக,
தோன்றிய ஏக்கம் நெஞ்சை அறுக்க,
துயரத்தின் உச்சியில் தவிக்கிறேன் தனியே.

எல்லாமே சில காலம்தான் இந்த
ஏற்பாடுகளும் இந்த உறவுகளும் கூட.
சொல்லொண்ணா விரக்தியின் நிழல் மட்டுமே
சுவாசமாய் இன்று என்னுள் மிஞ்சுது.



கவிஞர் நிஸ்ரினா, மதீனா

1.
இம்மை நிலத்தில்
நன்மை விதைத்திடு
மறுமை அறுவடை

2.
வந்த வழியிலே
வாழ்வு முடிந்துவிடும்
வினைகள் தொடரும்

3.
இம்மை வயலில்
நன்மை விதைத்திடு
நாளை அறுப்பாய்

4.
உறவுகள் திரும்பும்
உடல் மண்ணில் தங்கும்
செயலே துணையாகும்

5.
பொன்னும் பொருளும்
பூமியில் தங்கிவிடும்
நன்மை உடன் வரும்

6.
நாட்கள் கழிகின்றன
நன்மைகள் சேர்கின்றனவா?
நெஞ்சே, சிந்தி!

7.
நிழல்போல் வாழ்வு
நிரந்தரம் மறுமை
நினைவில் கொள்

8.
மரணம் வருமுன்
மறுமைக்குத் தயாராகுதல்
மானிடர் இலக்கு



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த, கலேவெல

சொந்த ஊர் மண்ணும்
காலில் ஒட்டாது போனது.
கொட்டும் பனியிலும் அமர நேரமின்றி,
விரையும் கடிகாரமாகிவிட்டது வாழ்க்கை.

கேலி - கிண்டல் - சண்டை - சச்சரவென,
மறுநாள் முகஞ்சுளியாது உறவாடும்
எத்தனையோ சகாக்கள் எல்லாம்
எப்போதாவது பேசும் தொலைபேசி அழைப்பாகிவிட்டனர்.

விரும்பி வனவாசம் சென்ற இராமன் அல்ல நான்;
ஆழம் தெரியாத அரசால் நிர்க்கதியாகி,
வெளிநாடு வந்த மத்தியதர வர்க்கத்தவன் நான்.



கடுகதி உலகின் பொருளாதார நெருக்கடியால்,
வசதிக்காக அல்ல, வாழ்வாதாரத்துக்காய் வேற்றிடம் வந்து,
வீட்டிற்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டு,
நாட்டிற்கு அந்நியச் செலாவணி தந்துவிட்டு,
பத்துக்கு பத்து அறையை எனக்குச் சிறையாக்கிக் கொண்டேன்.

வந்து வருடங்கள் நான்காகின்றன.
அடுப்படிப் பக்கமே போகாதவன், அரைகுறைச்
சமையல்காரன் ஆகிவிட்டேன்.
தொட்டதற்கும் கிளர்ந்தெழுபவன் இன்று
அகிம்சையாளன் ஆகிவிட்டேன், சூழ்நிலை வசத்தால்.

வந்த சோலி முடிந்துவிட்டதே என
மனம் கூறும் போதெல்லாம்,
உன்னைப் பற்றியும் நீ சிந்தி என
மூளை கூறும்; ஆதலால்தான்
இன்னுமோர் ஆண்டு அஞ்ஞாதவாசம்.

"வா" எனப் பலர் அழைக்கையிலும்,
வேனிற்காலம் முடித்த வேடந்தாங்கலாய்,
செல்லும் நாளுக்காய் என் தேசத்தை எண்ணிச்
சிறகடிக்கக் காத்திருக்கிறேன்.

கவிஞர் அளவையூர் அனுஜன், அளவெட்டி

இரட்டையாய்...

நமக்கு ஒரு விஷயம்
தெரியவில்லை எனில்,
எல்லோருக்கும்
எல்லாம் தெரியுமா?
பிறர்க்கு எனில்,
இதுகூடவா தெரியலை?

நமக்கான வெற்றிக்கான
உவகையில்,
எவ்வளவு கஷ்டத்துக்குப் பின்னே
கிடைத்தது!
பிறர்க்கு எனில்,
இது என்ன பெரிய விஷயமா?

நம்மின் ஏமாற்றத்தின்,
தோல்வியின், வேதனையில்
அத்தனையும் போச்சே!
பிறர்க்கு எனில்,
யாருக்குத்தான் இல்லை?

நம்மின் எதிர்காலம்
பற்றிய நம்பிக்கையில்,
இது முடியும்!
பிறர் என்றால்,
பேசிக்கொண்டே
இருந்தால் போதுமா?

என இரட்டையாய்
நிலைப்பாடாய்,
நமக்கு என்று ஒன்று,
பிறருக்கு என்று வேறு,
பெரும்பான்மை
மனித மனங்களில்.



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

நூல் அனுபவம் (சிறுகதைத் தொகுப்பு)

எழுத்தாசிரியர்: கண்ணன் விஸ்வகாந்தி; வேரல் வெளியீடு
பக்கம் 98; விலை ரூபாய் 160



தானே கண்ணாடியாகி வெளியெங்கும் நிறைதல்...

தன்னை பூமிக்கு அறிமுகப்படுத்திய மண்ணின் வாசனையிலிருந்து தான் வாழும் இந்த பூமியில் சாதிக்க நினைத்த செயல்பாடுகளின் வழியில் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட மனதில் விளைந்திட்ட எண்ண வெளிப்பாடாக சிறுகதைகள் அமைந்திருக்கின்றன.
நடந்த நிகழ்வுகளை உள்ளது உள்ளபடியே எழுதிச் செல்லும் சிக்கற்ற இயல்பான மொழி நூலெங்கும் பரவி இருக்கிறது அதுவே நமது கதை இது என்ற உணர்வை நமக்குள் விதைத்து விடுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தின் அவதி, குடும்பத்தில் ஆணுக்கு கிடைக்காத மரியாதையால் நடைபெறும் விளைவுகள், ஒரு நொடி நேர கோபத்தின் வெளிப்பாடு எத்தனை மனங்களை ரணப்படுத்துகிறது என்பதை விரிவாகப் பேசும் கதைகள் நமக்கு புதியதொரு காட்சியாக அமைகின்றன

நவீனம் நம்மை கருவிகள் வழியே அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் போதும் தீண்டாமையின் தீ நட்புகளுக்குள் எத்தகைய விரிசல்களை ஏற்படுத்துகிறது என்பதையும் ஒரு கதை பேசுகிறது

அப்பாவின் இயல்பு தெரிந்தும் திடீரென அவர் மீது ஏற்பட்ட கோபம் குடும்பத்தில் அதுவரை சேர்த்து வைத்திருந்த அத்தனை மரியாதையையும் அப்பாவை இழக்க வைத்திருந்தது. அதன் விளைவாக அப்பாவை இழந்த மகனின் மனம் எப்படி அனலில் இட்ட புழுவைப் போல துடிக்கிறது என்பதை மன்னிப்பு கதை காட்சிப்படுத்துகிறது.

கவிஞர் இளையவன் சிவா

நூல் அனுபவம் (சிறுகதைத் தொகுப்பு)

முதல் கதையில் குடும்பமோ மனைவியோ புரிந்து கொள்ளாது கைவிடும்போது ஆண்களின் மனதில் ஏற்படும் வலியும் வேதனையும் உலகமயமாக்கலின் விளைவாக மனிதர்களை வெறுமனே லாபம் தரும் இயந்திரங்களாக மாற்றிவிட்டு கருணையை முற்றிலும் இழந்துவிட்ட சமூகம்

சக மனிதர்களை நின்று நிதானித்து மனம் விட்டுப் பேசி ஆறுதல் கூறுவதற்கும் இயலாமல் ஓடிக்கொண்டிருக்கும் மக்களின் வேகம் அனைத்தையும் சுமந்து கொண்டு நின்றபடியே தன்னை நினைக்கும் சராசரி மத்திய தர நபரின் அன்றாடத்தில் எத்தனை எத்தனை காட்சிகள் வாசிக்கும் நம் கண்முன்னே விரியத் துவங்குகின்றன. விவசாயத்தின் உச்சத்தில் எத்தனையோ குடும்பங்களுக்கு வாழ கூலி கொடுத்துச் சிவந்த கைகள் மக்களின் ஐந்துக்கும் பத்துக்குமாக நீளுகையில் ஏற்படும் வேதனையையும் நம்மால் உணர முடிகிறது.

விற்பனை பிரதிநிதிகளின் அலைச்சலும் அதன்மூலமான அனுபவத்தின் விளைவுகளும் அவர்களை எப்படியெல்லாம் அலைக்கழிக்கின்றன என்பதை ஒரு கதை விவரிக்கிறது. வாழ்வின் வெற்றி என்பது நாம் எடுத்த அத்தனை செயல்களிலும் உச்சத்தை அடைதல் என்பது அல்ல நமது செயல்களின் வழியே பிறரது வாழ்வை நாம் எப்படி எல்லாம் உயர்த்துவதற்கு துணை நிற்கிறோம் என்பதே. ஒரு நல்ல கதையும் வாசிப்பவர் மனதில் அப்படியான எண்ணங்களை விதைப்பதே அதன் வெற்றியாக பார்க்கப்படுகிறது நம்மைச் சுற்றி நடக்கும் சிறு சிறு நிகழ்வுகளும் நமக்கு நல்லதொரு பாடமாக அமையக்கூடும் கிடைக்கப் போகும் பெரிய வெற்றிகளை காட்டிலும் வாழ்வில் நாம் அடைந்த சிறு சிறு தோல்விகள் நமக்கு நல்ல நல்ல பாதைகளை கட்டமைத்துக் கொடுக்கும்.

மனங்களுக்குள் ஊறிப்போன சாதிய கட்டமைப்பு ஏற்படுத்தும் மன வன்முறை குடும்ப உறவுகளுக்குள் நிகழும் மலச்சிக்கல் நீண்டு கொண்டே போகும் குற்ற உணர்வால் ஏற்படும் மறைமுக அழுத்தங்கள் என சக மனிதனின் வாழ்க்கை அனுபவங்களை இந்தக் கதைகள் அதிகம் பேசுகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

நூல் அனுபவம்

(சிறுகதைத் தொகுப்பு)

நூலில் இடம்பெறும் 11 சிறுகதைகளில் பல கதைகள் அவரது சுய வாழ்வில் இருந்து பெறப்பட்ட அனுபவங்களின் தொகுப்பாக அமைந்து நிற்கிறது இத்தகு கதைகள் எழுதுவோர் மீதான பச்சாதாபத்தையும் பரிதாபத்தையும் ஏற்படுத்தும் ஆபத்து உள்ளது. ஆனால் அதை எல்லாம் கடந்து தனது எழுத்தின் வழியே தனக்கான அனுபவத்தை எல்லோருக்குமான வழிகாட்டியாக விதைத்திருப்பது நூலாசிரியருக்கு கதை சொலல் பாங்கு கை கூடி இருப்பதை உணர முடிகிறது.

நீல நிறச் சீருடை அணிந்தவர் தொகுப்பு வாசித்து முடிக்கும் போது நம்மோடு பயணிக்கும் சக மனிதர்கள் மீதான கருணையை இன்னும் கொஞ்சம் பேரன்பாக நீட்டிக்கச் சொல்கிறது. நம்மைச் சுற்றி காலை வாரும் மனிதர்களும் நிறைந்திருக்கும் இந்த உலகில் எல்லோரையும் அன்பினால் வழிநடத்துவது சாத்தியமே என்றும் அதற்கு நமக்குள் வளரும் அன்பும் கொஞ்சமே கொஞ்சமான நேரமும் அவசியம் என்ற பாடத்தையும் கற்றுத் தருகிறது.



கவிஞர் இளையவன் சிவா

கவிஞர் மு. மேத்தா

கட்டுரை



தமிழ் இலக்கிய உலகில் மரபுக்கவிதையின் இறுக்கமான சட்டகங்களைத் தளர்த்தி, எளிய மக்களும் உணர்ந்து ரசிக்கும் வகையில் புதுக்கவிதையை வீதிக்குக் கொண்டுவந்த முன்னோடி கவிஞர்களுள் முதன்மையானவர் கவிஞர் மு. மேத்தா. எழுபதுகளில் வீசிய வானம்பாடி கவிதை இயக்கத்தின் முதன்மை முகமாகத் திகழ்ந்த இவர், சமூக விழிப்புணர்வு, காதல் உணர்வுகள், எளிய மனிதர்களின் துயரங்கள் ஆகியவற்றைத் தமது சுடோகக் கவிதை வரிகளால் செதுக்கியவர்.

தோற்றமும் கல்வியும்

மு. மேத்தா அவர்கள் தேனி மாவட்டத்தில் உள்ள பெரியகுளத்தில் 1945-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் தேதி பிறந்தார். இவருடைய இயற்பெயர் முகமது மேத்தா என்பதாகும்.

கல்வி: சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களைப் பெற்றார்.

ஆராய்ச்சி: "வளர் தமிழ் இலக்கியத்தில் புதுக்கவிதையின் பங்கு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (Ph.D.) பெற்றார்.

பணி: சென்னை மாநிலக் கல்லூரியிலேயே நீண்ட காலம் தமிழ் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

கவிதை உலகம் மற்றும் வானம்பாடி இயக்கம்

1970-களில் கோவையில் பிறந்த 'வானம்பாடி' கவிதை இயக்கம் தமிழ் புதுக்கவிதை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. "மானுடம்

கவிஞர் மு. மேத்தா

கட்டுரை

கவிதை உலகம் மற்றும் வானம்பாடி இயக்கம்

1970-களில் கோவையில் பிறந்த 'வானம்பாடி' கவிதை இயக்கம் தமிழ் புதுக்கவிதை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. "மானுடம் பாடுதல்" என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இயங்கிய இந்த இயக்கத்தில், மு. மேத்தா தம் கவிதைகளால் தனித்துவமான இடத்தைப்பிடித்தார்.

மேத்தாவின் கவிதைகளில் உருவகங்களும், உவமைகளும் மிக இயல்பாக அமைந்து வாசகரின் மனதைத் தொடுபவை.

"வெளிச்சம் என்பது விளக்கில் இல்லை
நீ விழிக்கும் விழியில் இருக்கிறது!"

என்ற இவரின் வரிகள் இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் நல்வழிப் பாதையாக அமைந்தன.

முதன்மைப் படைப்புகள்

கவிதை, நாவல், கட்டுரை, நாடகம், திரையிசைப் பாடல்கள் எனத் தமிழ் இலக்கியத்தின் பல தளங்களில் இவர் முத்திரை பதித்துள்ளார்.

1. கவிதைத் தொகுப்புகள்

கண்ணீர் பூக்கள்: மேத்தாவைத் தமிழ் உலகிற்கு அடையாளப்படுத்திய முதல் மற்றும் புகழ்பெற்ற கவிதைத் தொகுதி.

ஊர்வலம்: இளைஞர்களின் எழுச்சி மற்றும் சமூகப் பார்வையை வெளிப்படுத்திய நூல்.

ஆகாயத்துக்கு அடுத்த வீடு: மனித உறவுகளையும் ஆன்மீகத் தேடலையும் இயம்பும் நூல்.

சோழ நிலா, மனச்சிறகு, வெளிச்சம் வெளியே இல்லை, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் ஆகியவை இவரின் பிற முக்கியக் கவிதை நூல்களாகும்.

2. நாவல்கள் & உரைநடை

மகுட நிலா: வர வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்ட ஒரு சிறந்த வரலாற்று நாவல்.

நட்டநடு நிசியில்: சமூகப் பிரச்சினைகளைப் பேசும் புதினம்.

3. திரைத்துறை பங்களிப்பு

திரைப்படத் துறையிலும் தடம் பதித்த மேத்தா, 'அகல் விளக்கு', 'வேலைக்காரன்', 'இளமைக் காலங்கள்' போன்ற பல படங்களில் மறக்க முடியாத பாடல்களை எழுதியுள்ளார்.

விருதுகளும் சிறப்புகளும்

மு. மேத்தாவின் இலக்கியப் பங்களிப்பைப் பாராட்டிப் பல உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன:

விருது / பட்டம்	வழங்கிய அமைப்பு / காரணம்
சாகித்திய அகாதெமி விருது	'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' கவிதைத் தொகுப்பிற்காக (2006)
பாரதிதாசன் விருது	தமிழ்நாடு அரசு வழங்கியது
தமிழக அரசின் கலைமாமணி விருது	இலக்கியச் சேவையைப் பாராட்டி வழங்கப்பட்டது
சிவாஜி கணேசன் விருது	திரைத்துறை பங்களிப்பிற்காக

கட்டுரை

கவிதை நடை மற்றும் சமூகப் பார்வை

மு. மேத்தாவின் கவிதைகளில் நையாண்டியும், அழுத்தமான சமூகக் விமர்சனமும் இழையோடும். வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், மனிதநேயக் வீழ்ச்சி போன்ற தலைப்புகளில் இவர் எழுதிய கவிதைகள் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தின.

எதுகை, மோனைகளுக்காகச் சொற்களைத் தேடாமல், உணர்வுகளுக்கு முதன்மை கொடுத்து எளிய நடையில் புதுக்கவிதையைப் படைத்ததே இவரின் பெருவெற்றிக்குக் காரணமாகும்.

முடிவுரை

மரபு வழிவந்த கவிதையை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்று, புதுக்கவிதைக்கு ஓர் அரிய மரியாதையை உருவாக்கித் தந்தவர் கவிஞர் மு. மேத்தா. தமிழ் இலக்கிய உலகம் உள்ளவரை இவருடைய 'கண்ணீர் பூக்கள்' வரிகளும், எழுச்சிமிக்க கவிதைகளும் மக்களின் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்.



திரு. அ. வில்சன், இதழாசிரியர்



நாளை நமதே

தோல்விகளைக் கண்டு

ஒருபோதும் தயங்காதே;

அவை உன்னை

வீழ்த்த வந்த தடைகள் அல்ல,

உன்னை செதுக்க வந்த உளி.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com